நமது நிருபர்

# மாநகர் மன்ற அமலாக்க அதிகாரியைக் கடித்து, தாக்கிய பெண்ணுக்கு வெ.3,000 அபராதம்!



கோலாலம்பூர், மார்ச் 10- மாநகர் மன்ற அமலாக்க அதிகாரியைக் கடித்து, தாக்கிய பெண்ணுக்கு வெ.3,000 அபராதம் விதிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட 30 வயதுடைய அப்பெண் தான் புரிந்த குற்றத்தை 186ஆவது குற்றவியல் சட்டத்தின் கீழ் ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து இந்த அபராதம் விதிக்கப்பட்டதாக டாங் வாங்கி மாவட்ட போலீஸ் தலைவர் ஏசிபி சுலிஸ்மி அஃபெண்டி சுலைமான் தெரிவித்தார்.

பக்கம் 13

## மாநகர் மன்ற அமலாக்க...

15 முதல் 39 வயதிற்குட்பட்ட 3 ஆடவர்களில் மற்றுமொருவர் துணை அரசுத் தரப்பு வழக்கறிஞரிடம் கொண்டு செல்லப்படுவார் என்று ஓர் அறிக்கையில் ஏசிபி சுலிஸ்மி அஃபெண்டி சுலைமான் குறிப்பிட்டார்.

முன்னதாக ஜாலான் பெந்தெங்கில் கடந்த புதன்கிழமை காலை 11.30 மணிக்குச் சாலையில் அமலாக்க அதிகாரி உணவு டிரக்கை திசை திருப்பும் போது அவருக்குக் காயம் ஏற்படும் வரை அவரை ஒரு பெண் கடித்து விட்டார்.

அன்றைய தினத்தில் இரவு 10.08 மணிக்கு நிகழ்ந்த மற்றொரு சம்பவத்தில் மஸ்ஜிட் இந்தியாவிலிருந்து திரும்பும் போது மாநகர் மன்ற அமலாக்க அதிகாரி கடுமையாக மோதப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.